## அரசியல் நீதி நடக்கிறது

உழைப்பவன் ஒருவன் உண்பவன் ஒருவன்
உலகினில் இதுதான் நடக்கிறது.
தழைப்பவன் ஒருவன் தாழ்பவன் ஒருவன்
தரணியில் இன்றும் இருக்கிறது.

இன்பத்தில் ஒருவன் துன்பத்தில் ஒருவன்
இத்தரைக்குள்ள மாட்சியிது
அன்பினில் ஒருவன் வன்பினில் ஒருவன்
யாம்தினம் காணும் காட்சியிது.

கடமையில் ஒருவன் களவினில் ஒருவன்
காசினி காட்டும் உண்மையிது
உடைமையில் ஒருவன் வறுமையில் ஒருவன்
உலகியல் வாழ்க்கைத் தன்மையிது.

வாய்மையில் ஒருவன் பொய்மையில் ஒருவன்
வையகம் சொல்லும் வாழ்க்கையிது
தூய்மையில் ஒருவன் தீமையில் ஒருவன்
தொடர்கதையாகும் செய்தியிது.

குடிசையில் ஒருவன் கோபுரத் தொருவன்
குவலய மீதில் நிலைக்கிறது
அடிமையாய் ஒருவன் ஆள்பவன் ஒருவன்
அரசியல் நீதி நடக்கிறது.

காரை செ. சுந்தரம்பி